## நாடாளுமன்றத் தேர்தலில் நமது வெற்றி உறுதியாகி விட்டது!

# இந்தியாவுக்கே விடியல் ஆட்சியைத் தரப்போவது, நம் தமிழ்நாட்டு மக்கள்தான்!

## சிதம்பரம் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சிதம்பரம், ஏப்.1**

**சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜெயங்கொண்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனுக்கு ஆதரவாக, நேற்று முன்தினம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.**

**அப்போது மாநாடு போல திரண்டிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சி உரையாற்றுகையில், "நாடாளுமன்றத் தேர்தலில் நமது வெற்றி உறுதியாகிவிட்டது. இந்தியாவுக்கே விடியல் ஆட்சியைத் தரப்போவது நம் தமிழ்நாட்டு மக்கள் தான்" என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்திருக்கிறேன். முதலில், நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கிட்டத்தட்ட 7:30 மணி அளவில் எல்லாம் நான் இங்கு வந்து இருக்க வேண்டும். காலையில் காஞ்சிபுரத்தில் ஆரம்பித்து, அதன் பிறகு நம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வெற்றி வேட்பாளர் அண்ணன் ரவிக்குமார் அவர்களுக்காகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, மூன்று இடங்களில் பேசிவிட்டு, அதன் பிறகு நம் விருத்தாசலம் தொகுதியில் நம் கூட்டணிக் கட்சி காங்கிரஸ் கட்சிக்காகப் பிரச்சாரம் செய்துவிட்டு, வரும் வழி முழுக்க எனது வாகனத்தை நிறுத்தி, பொதுமக்களாக இருக்கட்டும், நம் கழகத்தினராக இருக்கட்டும், நமது கூட்டணிக் கட்சியினராக இருக்கட்டும், ``நீங்கள் தான் வெற்றி பெறப் போகிறீர்கள். 40க்கு 40 தி.மு.க கூட்டணி வெற்றி பெறப் போவது உறுதி" என்று என்னை வாழ்த்தி அனுப்பி இருக்கிறார்கள். அதனால் வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது.

### பானை சின்னம்

இருந்தாலும், எனக்கு இவ்வளவு சிறப்பான எழுச்சியான நான் உணர்வுப்பூர்வமாக உண்மையாகவே சொல்கிறேன். இதுவரை 15 தொகுதிகளில் பிரச்சாரம் செய்திருக்கிறேன். இதுவரைக்கும் எந்தத் தொகுதியிலும் இது போன்ற ஒரு எழுச்சியை, இப்படி ஒரு வரவேற்பை, இப்படி ஒரு ஆரவாரத்தை இதுவரைக்கும் இந்த எட்டு நாளில் நான் பார்த்ததே இல்லை. இதிலிருந்தே தெரிகிறது, நீங்கள் அத்தனை பேரும் முடிவெடுத்து விட்டீர்கள், நமது எழுச்சித்தமிழர் அண்ணன் திருமா அவர்களுக்கு வெற்றிச் சின்னம் பானை சின்னத்தில் வாக்களித்து மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து விடுவீர்கள் என்று தெரிகிறது. முதலில் இந்த வரவேற்பை அளித்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றி.

தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் `இந்தியா' வெற்றிக் கூட்டணி சார்பாக, நம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக, போட்டியிடுகிற எழுச்சித் தமிழர் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அன்புத் தம்பி, நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வரின் தளபதி, என் அரசியல் வழிகாட்டி அண்ணன் திருமாவளவன் அவர்களுக்கு வெற்றிச் சின்னமாம் பானை சின்னத்தில் வாக்குச் சேகரிக்க, நான் பாதி வெற்றியோடு வந்திருக்கிறேன்.

### விடுதலைச் சிறுத்தைகள் மாநாடு

இது பிரச்சாரக் கூட்டம் போலத் தெரியவில்லை. இது வெற்றி விழா நிகழ்ச்சி போல இருக்கிறது. இது சிதம்பரத்தில் கூடுகிற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநாடு போல இருக்கிறது. அண்ணன் என்னை நிறைய முறை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநாட்டிற்கு அழைத்திருக்கிறார். ஆனால், என்னால் வர முடியாத சூழ்நிலை. ஆனால், பாருங்கள் இன்றைக்கு சிதம்பரத்தில் அவருக்காக நான் பிரச்சாரம் செய்ய வந்திருக்கிறேன். இதுவே ஒரு மாநாடு போல நடந்து கொண்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் நம் வேட்பாளர் அண்ணன் தொல்.திருமாவளவன் அவர்கள் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் கிட்டத்தட்ட 4,500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். சென்ற முறை அப்போதுதான் புதிதாக பானைச் சின்னம் வந்தது. இப்போது பானைச் சின்னம் உலகப் புகழ் பெற்ற சின்னமாக ஆகிவிட்டது. எங்கே பார்த்தாலும் பானைச் சின்னம்தான்.

### மிகப்பெரிய சட்டப் போராட்டம்

முதலில் அண்ணன் திருமா அவர்களுக்கும் அவரின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வழக்கறிஞர்கள் அணியினருக்கும் நான் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றிய பா.ஜ.க, தேர்தல் ஆணையத்தைக் கையில் வைத்துக் கொண்டு, அவர்களுடன் கூட்டணி சேர்ந்தால் அவர்கள் கேட்கிற சின்னம், சின்னச் சின்னத் துக்கடாக் கட்சிகளுக்கெல்லாம் அவர்கள் கேட்கிற சின்னத்தைக் கொடுக்கிறார்கள். ஆனால், நம் விடுதலைச் சிறுத்தைகளுக்கு மிகப்பெரிய சட்டப் போராட்டத்தை நடத்தி இன்றைக்கு வெற்றிகரமாக இந்தப் பானைச் சின்னத்தை வாங்கி இருக்கிறோம் என்றால் கண்டிப்பாக வெற்றி உறுதி. நிச்சயம் வெற்றி பெறப்போவது உறுதி.

நான் ஒன்றே ஒன்றை மட்டும் கேட்கிறேன். சென்ற முறை குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில்தான் அவர் வெற்றி பெற்றார். ஆனால், இந்த முறை இந்த வருடம் எத்தனை வாக்குகள் வித்தியாசத்தில் எழுச்சித்தமிழர் அண்ணன் திருமா அவர்களை வெற்றி பெற வைக்கப் போகிறீர்கள்? குறைந்தது மூன்று லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் அவரை வெற்றி பெற செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியே ஆகவேண்டும்.

இவ்வளவு எழுச்சியோடு இருக்கிறீர்கள். ஏப்ரல் 17 ஆம் தேதியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிகிறது. அடுத்த 18, 19 நாட்கள் இதே எழுச்சியோடு இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இப்போது தமிழ்நாட்டுச் செய்திகளில் மட்டுமல்ல, இந்தியா செய்திகளிலேயே பானைச் சின்னம் தான் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த அளவிற்கு ஒரு சட்டப் போராட்டத்தை நடத்தி, சின்னத்தைப் பெற்றிருக்கிறார். அதற்கு, அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மறக்க முடியாத ஒரு பொன்னாள்!

2018இல் இருந்து பலப் பல பிரச்சாரங்களில் ஈடுபட்டு இருக்கிறேன். பல தலைவர்களுக்குப் பிரச்சாரம் செய்திருக்கிறேன். கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் பிரச்சாரம் செய்திருக்கிறேன். ஆனால், இன்றைக்கு இந்த நாள் என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பொன்னாள். ஏனென்றால், என் அண்ணன், சமூக நீதிப் போராளி, நம் கலைஞரின் அன்புத் தம்பி அண்ணன் திருமா அவர்களுக்காக முதன்முதலாக நான் பிரச்சாரத்திற்கு வந்திருக்கிறேன். எனவே, இந்த நாளை எனது வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாளாகக் கருதுகிறேன்.



அதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். அண்ணனை எதிர்த்து யார் போட்டி போட்டாலும் சரி, எந்தக் கொம்பனாக இருந்தாலும் சரி, டெபாசிட் இழக்கிற அளவிற்கு நீங்கள் உங்களின் தேர்தல் பணியை அமைத்துக் கொள்ள வேண்டும். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நான் பிரச்சாரத்திற்கு வந்திருந்தேன். என் அருமைத் தம்பி கா.சொ.க.கண்ணன் அவர்களுக்காகப் பிரச்சாரத்தை மேற்கொண்டேன்.

அப்போது இந்த ஜெயங்கொண்டம் தொகுதியில் அவருக்கு கிட்டத்தட்ட 5,500 வாக்குகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தந்தீர்கள். அந்த வெற்றிக்கும் நீங்கள்தான் காரணம். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் இந்த மூன்று வருடத்தில் நம் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் சேர்ந்து செய்த சில பணிகளை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

### நிலங்கள் திரும்ப ஒப்படைப்பு

நிலக்கரி திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8,734 ஏக்கர் நிலங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தும் வகையில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு இடம் ஒதுக்கப்பட்டு, 16 கோடியே 40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ராஜேந்திரப்பட்டினம் முதல் ஜெயங்கொண்டம் வரை நான்கு வழிச் சாலை அமைக்க, 185 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10 ஏரிகளை மேம்படுத்த ரூபாய் 9 கோடியே 60 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் 2 கோடியே 25 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. இதுவெல்லாம் கடந்த மூன்று வருடத்தில் நம் சட்டமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினரும் சேர்ந்து இந்தப் பகுதிக்குச் செய்திருக்கக்கூடிய சின்னச் சின்னப் பணிகள். அதில் சில எடுத்துக்காட்டுகளை மட்டும்தான் நான் சொல்லி இருக்கிறேன்.

### சொல்வதைச் செய்வோம்

நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் அறிக்கையை வெளியிடுவார். அறிக்கையை வெளியிட்டு, 'சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம்' என்று சொல்வார். அப்படி அவர் சொன்னதைச் செய்து காட்டியவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரின் வழியில் வந்த நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் சொல்வதைத்தான் செய்வார், செய்வதைத்தான் சொல்வார். அப்படி இந்த நாடாளுமன்றத் தொகுதிக்காக அவர் அளித்துள்ள சில வாக்குறுதிகளை மட்டும் உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன்.

ஜெயங்கொண்டத்தில் தொழில் வளத்தைப் பெருக்க சிப்காட் தொழிற்சாலை வருகிற ஆண்டுகளில் அமைக்கப்படும். தா.பழூரில் அரசு தொழில் பயிற்சி நிலையம் விரைவில் தொடங்கப்படும். 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

ஜெயங்கொண்டம் நகராட்சிக்குத் தனிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். கொள்ளிடம் ஆற்றில் நிரந்தரத் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### கடும் நிதி நெருக்கடி

சென்ற 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நம் தலைவர் அவர்களை ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் வெற்றி பெற வைத்து, அழகு பார்த்தார்கள். நம் தலைவர் யாரின் காலிலும் விழுந்து முதலமைச்சர் ஆகவில்லை. தவழ்ந்து சென்று யாருடைய காலையும் பிடித்து முதலமைச்சர் ஆகவில்லை. தமிழ்நாட்டு மக்கள் நீங்கள் தேர்ந்தெடுத்து அவரை முதலமைச்சர் ஆக்கினீர்கள்.

எப்படி 2021ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்தியா முழுக்க பா.ஜ.க வெற்றி பெற்றார்கள். ஆனால், தமிழ்நாட்டில் நாம் தான் வெற்றி பெற்றோம். அப்போதும் அந்த விழிப்புணர்வு தமிழ்நாட்டு மக்களிடம் மட்டும்தான் இருந்தது. அதேபோல் கோவிட் நேரத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது நம் தமிழ்நாட்டு மக்கள்தான்.

ஆட்சி அமைத்த உடன் கடும் நிதி நெருக்கடி. தேர்தலில் நாம் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தோம். அந்த நிதி நெருக்கடியிலும் தலைவர் அவர்கள், தான் அளித்த வாக்குறுதிகளைச் செயல்படுத்தி மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் என முதல் ஐந்து கையெழுத்துகளைப் போட்டு அந்தத் திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டியவர்தான் நம் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்.

பெண்கள் விடுதலைக்காகத் தன் உயிர்மூச்சு இருக்கிறவரைக்கும் போராடியவர்தான் நம் தந்தை பெரியார் அவர்கள். பெண்களின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்தவர்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள். பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்ததுதான் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் வந்த நம் தலைவர், பெண்கள் படிக்க வேண்டும், அவர்கள் பள்ளிக்கூடம் வரைக்கும் மட்டும் படித்தால் போதாது, உயர் கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்.

20 நாட்களுக்கு முன்பு என்னிடம் சொன்னார்கள். ஒன்றியப் பிரதமர் ராமநாதபுரம் தொகுதியில்தான் நிற்கப் போகிறார் என்றார்கள். நான் சொன்னேன், `அப்படியென்றால் என் முதல் பிரச்சாரக் கூட்டமே ராமநாதபுரத்தில் தான். பார்த்துவிடலாம்' என்று சொன்னேன். கடைசியில் அவர் இங்கு போட்டி போடவில்லை. பயந்து கொண்டு ஓடிப் போய்விட்டார். மீண்டும் வருவார். தேர்தல் முடிகின்ற வரைக்கும் வந்து கொண்டே இருப்பார். நம்மை எவ்வளவுக்கு எவ்வளவு பயமுறுத்திப் பார்க்க வேண்டுமோ, எவ்வளவுக்கு எவ்வளவு வடை சுட வேண்டுமோ அவ்வளவு வடையும் சுடுவார். ஆனால், அந்த வடையை நமக்கும் கொடுக்க மாட்டார்.

நான் உங்களிடம் வைக்கிற வேண்டுகோள் எல்லாம் ஒன்றே ஒன்று மட்டும்தான். ஒன்றியப் பிரதமர் அவர்களை அவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிடாதீர்கள். அவருக்கு நாம் ஒரு செல்லப் பெயர் வைத்திருக்கிறோம். '29 பைசா' என்று கூப்பிடுங்கள்.

### நீட் தேர்வு வேண்டாம்

ஒன்றிய அரசு நம் கல்வி உரிமை, நிதி உரிமை, மொழி உரிமை ஆகிய அனைத்தையும் பறித்து விட்டார்கள். அதற்கு ஒரு சிறந்த உதாரணம் நீட் தேர்வு. 2010ஆம் ஆண்டு இந்தியாவிற்கு நீட் தேர்வு அறிமுகம் ஆகிவிட்டது. அப்போது காங்கிரஸ் ஆட்சிதான். நாம் கூட்டணியில் தான் இருந்தோம். இந்தியா முழுக்கக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஆனால், கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வு வேண்டாம் என்றார். நாங்கள் இங்குக் கொடுக்கிற கல்வித் தரம் சிறந்த கல்வித் தரம். 12ஆம் வகுப்பில் வாங்குகிற மதிப்பெண் போதும். அதை வைத்து நாங்கள் கலந்தாய்வு முறையில் அவர்களைப் படிக்க வைக்கிறோம்.

கிராமப்புறங்களில் இருந்து ஏழை எளிய மாணவர்கள் படித்து மருத்துவராக வேண்டும் என்று நுழைவுத் தேர்வை ரத்து செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இன்னும் சொல்லப்போனால் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்த வரைக்கும் தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வு வரவில்லை. ஆனால், அவர் இறந்த பிறகு இங்கு இருக்கிற அடிமைக் கூட்டம் பா.ஜ.க அரசின் தொல்லை தாங்காமல் நீட் தேர்வை நுழைத்தது. இங்கு பக்கத்தில் அரியலூர் மாவட்டத்தில் என் தங்கை அனிதா தற்கொலை செய்து கொண்டார்.

அந்தப் பெண் நன்றாகப் படிக்கக் கூடிய பெண். 1200க்கு 1176 மதிப்பெண் எடுத்தது. அனிதா இப்போது உயிரோடு இருந்திருந்தால் டாக்டர் அனிதா என்று அழைக்கப்பட்டிருப்பார். அனிதாவோடு மட்டும் நிற்கவில்லை. இப்போது வரைக்கும் 22 குழந்தைகள் நீட் தேர்வால் இறந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் பத்து வருடம் கூட்டணியில் இருந்த, கூட நின்று நம் தமிழ்நாட்டு உரிமைகளை எல்லாம் பறிகொடுத்த அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் பதில் சொல்ல வேண்டுமா? வேண்டாமா? அந்தப் பதில் சொல்ல வேண்டிய நேரம் தான் ஏப்ரல் 19ஆம் தேதி.

### இந்தியாவுக்கே விடியல்!

2021ஆம் ஆண்டுத் தேர்தலில் அடிமைகளை விரட்டி அடித்து தமிழ்நாட்டிற்கு விடியல் ஆட்சியைக் கொடுத்தார் நம் தலைவர் அவர்கள். இப்போது 2024ஆம் ஆண்டுத் தேர்தலில் அடிமைகளின் எஜமானர்களையும் துரத்தி அடித்து ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே விடியல் ஆட்சியைத் தரப்போவது நம் தமிழ்நாட்டு மக்கள்தான். நீங்கள் யாரை முடிவு செய்கிறீர்களோ, நமது தலைவர் யாரை முடிவு செய்கிறாரோ அவர்தான் அடுத்த ஒன்றியப் பிரதமர் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கு நீங்கள் அத்தனை பேரும் அடுத்த 19 நாட்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு `இந்த ஒவ்வொரு வாக்குக்கும் நான் பொறுப்பு', `இந்த ஒரு வீட்டுக்கு நான் பொறுப்பு', `இவரை வாக்குச் சாவடிக்குக் கொண்டு வந்து பானை சின்னத்தில் அண்ணன் திருமா அவர்களுக்கு வாக்களிக்க வைக்கப் போகிறேன்' என்ற அந்தப் பொறுப்பை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு திரைப்படம் வெளிவருகிறது என்றால், முதலில் ட்ரெய்லர் வெளிவரும். நான் வெறும் டிரைலர் தான். படபடவென்று பேசிவிட்டுப் போய் விடுவேன். அடுத்து வருகின்ற 6ஆம் தேதி மெயின் பிக்சர் கழகத் தலைவர் வருகிறார். உங்களை எல்லாம் சிதம்பரத்தில் சந்திப்பார். அவர் கருத்துகளை எல்லாம் சொல்வார். ஆனால் அடுத்து, அவரும் அடுத்தத் தொகுதிக்கு சென்றுவிடுவார்.

### அன்போடு கேட்கிறேன்!

அடுத்த 19 நாள் நீங்கள் இங்கு இருந்து ஒவ்வொரு வாக்காளராகச் சந்தித்து, நம் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்த்து, எழுச்சித் தமிழர் அண்ணன் திருமாவளவன் அவர்களை 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், அண்ணன் எழுச்சித்தமிழர் திருமா அவர்களுக்குப் பானை சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடி தாருங்கள்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தனைச் செல்வன், கா.சொ.க.கண்ணன், கோ.சின்னப்பா, சட்டதிட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபாஷ் சந்திரசேகர், கழகக் கொள்கைப் பரப்புத் துணை செயலாளர் பெருநரைக்கிள்ளி, வர்த்தகர் அணி துணைச் செயலாளர் பெரியசாமி, இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், ஆனந்தகுமார், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கணேசன், பிரதாப் பாலு, சந்திரசேகர், பொருளாளர் ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியம், ஜெயங்கொண்டம் நகரச் செயலாளர் வெ.கோ.கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், மணிமாறன், ரெங்கமுருகன், கலியபெருமாள், பேரூர் கழகச் செயலாளர் கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீரசிவா, எஸ்.ஆர்முருகேசன், தமிழ்மாறன், வசந்த பகலவன், குணசீலன், தர்மராஜ் மற்றும் இந்தியா கூட்டணியின் தலைவர்கள் தொண்டர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம்,வேளச்சேரி மேற்கு பகுதி,175 வது வார்டில்,கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து பகுதி செயலாளர் அரிமா சு. சேகர்,வட்டச் செயலாளர் ஆர். பாரதிராஜா, மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி முருகவேல்,கழக உறுப்பினர்கள் எம். ஏழுமலை, செந்தில்குமார், கனகராஜ் ஆகியோர் நேரு நகர்,மதியழகன் தெருவில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

நீலகிரி மாவட்டம், உதகை நகரத்தைச் சேர்ந்த கே.ஏ.முஸ்தபா அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 31.03.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



வட சென்னை மக்களவைத் தொகுதியில் இந்தியா கூட்டணியின் வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி திருவொற்றியூர் மேற்கு பகுதியில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.கே.எஸ்.இளங்கோவன், மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் தலைமையில் வீதி வீதியாக வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர்கள் வை.ம.அருள்தாசன், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், வி.இராமநாதன், ஆர்.டி.மதன்குமார், லயன் எஸ்.டி.சங்கர், லயன் தியாகராசன், கே.பி.சொக்கலிங்கம், திரவியம் சாமுவேல், ஜெயராமன், தம்பையா, சிவக்குமார் மற்றும் ஏராளமான கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.